www.tamilarangam.net

# சிந்தனை

மாசி'86 இல:1/3



இரண்டாவது போர்முனை

SINTHANAI

FEB.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்பளிப்பு. 3 DM.

உங்கள் கருத்துக்களையும் [illegible]
சிந்தனை [illegible], கருத்து [illegible]
பரிமாறல்கள் [illegible] சிந்தனை [illegible].
உங்கள் ஆக்கங்கள் அனுப்பப்பட வேண்டிய [illegible] -


ஆசிரியர் குழு,
சிந்தனை,
ஒல்கா ஸ்ட்ராஸ 49,
7000 ஸ்ருட்காட் 1,
மேற்கு ஜேர்மனி.

Editors,
c/o.SINTHANAI,
Olgastr. 49,
7000 Stuttgart 1,
West Germany.


SINTHANAI

Estd. 1985. No: 1/86.

All communications shall be addressed to:


P.Kumarasamy.
c/o. SINTHANAI,
Olgastr. 49,
7000 Stuttgart 1,
West Germany.


சிந்தனை

Matters relating to the articles etc.
shall be addressed to the Editoral
Committee,SINTHANAI. 1 . 2.1986.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை



## ஆசிரியர் கருத்து

தாங்கமுடியாத ஒடுக்குமுறைகளையும் அழிவுகளையும் சந்தித்துக்கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்கள் தம் அரசியல் வரலாற்றில் மீண்டும் ஒரு திருப்பு முனைக்கு வந்து கொண்டு இருக்கின்றார்கள். இந்தச்சந்தர்ப்பத்திலும் கடந்தகாலங்களில் ஏற்பட்டது போல அவர்கள் நிதானமாகச் சிந்தித்துச் செயல்படத்தவறினார்களேயானால் வருங்காலமானது கடந்த காலத்தைப்பார்க்கிலும் இடர்மிகுந்ததாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது.

பாராளுமன்றம் சென்ற சட்டத்தரணிகள் யாழ்தேவியில் 'ஈழம்' கொண்டுவருவார்கள் என்று மாலைகளுடன் நின்று ஏமாந்தது இன்று சரித்திரமாகிவிட்டது. "பொடியன்கள்" போராடத் தொடங்கிவிட்டார்கள், துரோகிகள் சுடப்பட்டுவிட்டார்கள், பொலிசாரையும் "ஆமி"க்காரரையும் அடித்துவிட்டார்கள் வங்கிகளையும் சங்கக்கடைகளையும் கொள்ளையடித்துப் பணம் சேர்த்துவிட்டார்கள், இனி இந்தியாவின் பக்கபலத்துடன் விடுதலை கிடைத்துவிடும் என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்த மக்களை இன்று ஏற்பட்டுள்ள வேலியே பயிரை மேயும் நிலைமையானது நிலைகுலையச்செய்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்களராணுவத்தினர் தமிழர்களின் வீடுகளிலும் கடைகளிலும் கொள்ளையடிக்கின்றார்கள், கோவில்களை அவமதிக்கின்றார்கள், இளைஞர்களைக் கைதுசெய்து சித்திரவதை செய்கின்றார்கள், மக்களைக் கொலைசெய்து தெருவில் போடுகின்றார்கள், அரசபடைகளுக்கு ஒளிந்து மக்கள் வாழவேண்டிய நிலைமை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றெல்லாம் தமிழர்கள்தம் நிலைபற்றி சர்வதேச அரங்கில் பிரசாரம் செய்தார்கள். ஆனால் இன்று எந்தமக்களின் விடிவுக்காக விடுதலை இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டனவோ அந்த மக்களே இயக்கங்களுக்கு அஞ்சி வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இன்று நலிவுற்று இருக்கும் மக்களிடம் மிரட்டிப்பணம் பறிக்கப்படுகின்றது. கோவில் கொள்ளைகள் மக்களின் இதயங்களை புண்படுத்துகின்றன. சித்திரவதைக்கூடங்களும் உளவுப்படைகளும் சிறிலங்கா அரசின் ஏகபோகஉரிமையல்ல, இன்று தலைவர்களின் நேரடிக்கட்டுப்பாட்டில் இவை இயக்கங்களுக்குள் இயங்குகின்றனவாம்! சகஇயக்கத் தோழர்களுக்கும் மற்றவர்களுக்கும் மரணதண்டனை விதிப்பதற்கு தனித்தலைமைகளும் அதை நியாயப்படுத்துவதற்கும் இயக்கத் தலைமைகளும் இருக்கின்றன. தம் இயக்கங்களுக்குள்ளேயே உட்கட்சி ஜனநாயகத்தையும் சகதோழர்களையும் குழிதோண்டிப்புதைக்கும் தலைமைகளிடம் இருந்து எந்தவிதமான ஜனநாயகத்தை சாதாரண தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் எதிர்பார்க்கமுடியும். அரசபடைகளுக்கு பயந்து ஒளிந்த காலம் போய் இன்று சக "தோழர்" களுக்குப் பயந்து வாழும் நிலை பல போராளிகளுக்கு ஏற்பட்டு விட்டது.

இவற்றிற்கான அடிப்படைக்காரணம் என்ன?

முறையான அரசியல் தயாரிப்பும் மக்கள் மீது நம்பிக்கையும் கொண்ட அமைப்புக்களை ஏற்படுத்தி அவற்றின் வழிகாட்டலில் மக்கள் பங்குகொண்டு செயலாற்றக் கூடிய வெகுஜனஇயக்கங்களுக்கூடாக மக்களைத் தயார்படுத்தி ஈழவிடுதலைப் போராட்டத்தை ஒரு மக்கள் விடுதலைப்போராட்டமாக முன்னெடுக்காமல் ஆயுதத்திற்கு முதல் இடம் கொடுத்து அரசியல் சித்தாந்தத்திற்குப் பதிலாக வீரசாகசச் செயல்களைச் செய்து மக்களைக் கவர்ந்து பின் ஆயுதம் தாங்கிய சில கவர்ச்சிகரமான தளபதிகளே மக்களே விடுவிப்பார்கள் என்ற மாயையை மக்கள் மனதில் பதியவைத்து மக்களை என்றென்றைக்குமாக போராட்ட அரங்கிலிருந்து அன்னியப்படுத்தி ஆயுதம் தாங்கியவர்களே மக்களின் எஜமானர்கள் என்ற நிலமைகளை உருவாக்கியதே இதற்குக் காரணமாகும்.

வெகுஜனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் அமைப்புக்களுக்குப் பதிலாக ஆயுதம் தாங்கிய குழுக்கள் மக்கள் மீது அதிகாரம் செலுத்துகின்றன. மக்கள் சுதந்திரமாக தீர்மானங்கள் எடுத்து தம் பிரச்சனைகளை தாமே

www.tamilarangam.net

தீர்ப்பதற்கு உதவியாக இருப்பதற்குபதிலாக அவர்களுக்கு ஆணையிடும் புதிய (முதளாளித்துவ கோட்பாடுகளுடன் கூடிய ) இராணுவமாக சில போராளிகள் செயல்படுகின்றார்கள். ஒரு முதளாளித்துவ போலிஸ், இராணுவம், விதானை செய்யும் தொழில்களை அவர்களைப் பார்க்கிலும் கொடூரமான முறையில் (மரண தண்டனை விதிப்பது உட்பட) செயல்ப்படுத்த இவர்கள் பின்நிற்பதில்லை. பாட்டாளிவர்க்க இராணுவத்திற்கும் முதலாளித்துவ இராணுவத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை அறியக்கூடிய சந்தர்ப்பங்கள் இவர்களுக்கு கிட்டாமல் இருந்திருக்கலாம் ஆனல் மனித உணர்வுகளை மதிக்கக்கூட தெரியாமல் போய் விட்டதா?


ஈழத்தில் ஒரு ஜனநாயகக்குடியரசைக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இந்தத் தலைமைகள் இன்று இயக்கங்களுக்குள்ளும் சக இயக்கங்களுக்குள்ளும் மக்கள் மத்தியிலும் தனிமனித சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் கடைப்பிடிக்கத்தவறும் போது ஆட்சிக்கட்டில் ஏறியபின், அதிகாரம் கைக்கு வந்தபின், பிணக்குவியலின் மேல் கம்போச்சியாவில் ஆட்சி செய்த "பொல் போட்டின்" ஆட்சியையா ஏற்படுத்தப் போகின்றார்கள்?

(தொடர்ச்சி- பக்கம் 31)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரண்டாவது போர்முனை:

## ஈழவிடுதலை இயக்கங்களுடன் ஒரு கருத்துப்பகிர்வு

"1971 ஏப்ரல் கிளர்ச்சி போன்று தென்னிலங்கையில் மீண்டும் அரசுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையே முரண்பாடு நிச்சயம் உருவாகும். அந்த நேரத்தில் திட்டமிட்ட செயற்பாடுகள் மூலம் நாம் தமிழ் ஈழ அரசை நிறுவுவோம்." 1977 பொதுத் தேர்தல் வாக்கு வேட்டையில் திரு அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கூறிய கூற்றாகும். இதனை வெகு சீக்கிரத்தில் தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

தென்னிலங்கையில் அரசுக்கும் மக்களுக்குமிடையே வளர்ந்து வந்த எந்த முரண்பாட்டையும் தமிழ் ஈழப்போராட்டத்தை உரப்படுத்த பாவிக்காது பாராளுமன்ற அரசியல் நடாத்திய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகளைப் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று தென்னிலங்கையில் உருவாகி வரும் முரண்பாடுகளை ஆயுத மேந்திப் போராடும் விடுதலை இயக்கங்கள் தொலை நோக்குடன் கூடிய அரசியல் செயற்பாடுகளால் எவ்வாறு ஈழப்புரட்சிக்கும் தென்னிலங்கைப் புரட்சிக்கும் சாதகமாக பயன்படுத்த போகின்றன என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1983ம் ஆண்டுக்கு பின் சுத்த இராணுவக் கண்ணோட்டதுடன் மேற்கொள்ளப்பட்ட கெரில்லா தாக்குதல்கள் இன்று ஈழ மக்களுக்கு ஓர் சரியான தீர்வைக் காண தவறிவிட்டன. மறுபக்கத்தில் ஜெயவர்த்தன அரசு ஆயுத பாணியாகி வருகின்றது.

இந்த நிலையிலே முழுமையா அரசியல் தயாரிப்பின் தேவைகளை ஓரளவு ஈழ விடுதலை இயக்கங்கள் உணரத் தொடங்கியுள்ளன.

இன்று எந்த வகையான மூலோபாயத்தை வகுத்து வைத்துக் கொண்டு போராடினால் அது புரட்சிக்கு இட்டுச் செல்லும் என்பதுவே இனிவரும் பக்கங்களில் நாம் ஆராயப் போகும் பிரச்சனையாகும்.

## கடந்த கால மூலோபாயம்.

1. அல்பிரட் துரையப்பா, பொலிஸ் கொஸ்தாப்பு அதிகாரி பஸ்தியாம்பிள்ளை போன்ற துரோகிகளை அழிப்பதன் மூலம் தமிழ் ஈழப் போராட்டத்தை நடாத்துதல்.

www.tamilarangam.net

2. தமிழ் ஈழப் பகுதிகளிலிருந்து துப்பாய்வு திணைக்களம் பிரிவை முற்றாக விரட்டியடித்தல், துப்புக் கொடுக்கும் துரோகிகளை அழித்தல்.

3. சிவில் நிர்வாகத்தை சீர்குலைத்தல்.

4. கெரில்லாத் தாக்குதல் மூலம் ஆயுதப் படைகளை ஈழமண்ணை விட்டு விரட்டியடித்தல்.

5. தமது போராட்டத்திற்கு ஏற்ற வகையில் மார்க்சிச லெனினிச சித்தாந்தத்தை ஒரு பக்கம் பார்வையுடன் விளக்க முற்படல்.

மேற்கூறிய ஐந்து நடவடிக்கைகளின் மூலம் தொட்டறியக் கூடிய விளைவை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கையில் இயக்கங்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தக் காலகட்டத்தில் ஈழப் போராட்டத்தை முன் எடுக்கும் இந்த இயக்கங்கள் இந்தியாவின் நச்சு வலையில் அகப்பட்டது. இந்தியாவின் தாராளமான இராணுவ உதவிகளை கொண்டு ஈழவிடுதலையை அடைந்து விடலாம் என்ற நினைப்புடன் இதுவரை செயற்பட்டனர்.

பாம்புக்கு பயந்து முதலை வாயில் அகப்பட்டதை போன்று இலங்கை அரசுக்கு பயந்து இந்தியாவிடம் அகப்பட்ட எமது இயக்கங்களின் நிலை இருக்கிறது. (தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களை வளர்த்து விட இந்தியாவிற்கு என்ன தேவை வந்தது என்பதை பிறிதொரு

www.tamilarangam.net

சமயம் ஆராய்வோம். தமிழ் ஈழ விடுதலை போராட்டமும் இந்தியாவும்" என்ற தலைப்பில் சரிமா எழுதிய புத்தகம் புதிய கண்ணோட்டத்தை தருகின்றது.)

இன்று இந்தியாவின் பிடியிலிருந்து மெள்ள மெள்ள விடுபட்டு கொண்டு விஞ்ஞான பூர்வமாக ஈழவிடுதலைக்கான மூலோபாயத்தை வகுத்துக் கொள்ள வேண்டும்.

வகுக்கப்பட வேண்டிய மூலோபாயம்.

வட கிழக்கு தேசிய விடுதலை போராட்டம் ஏற்கனவே முனைப்புப் படுத்தப்பட்டுள்ளது. இத் தேசிய விடுதலை போராட்டம் இன்று முதலாவது போர் முனையாகும்.

இலங்கையில் உருவாகக் கூடிய வேறு எந்த வகையான போராட்டமாக இருப்பினும் அது 1980ம் ஆண்டு பொதுவேலை நிறுத்தமாக இருந்தாலும் சரி 1984 ஏப்ரல் மாதத்து தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தமாக இருந்தாலும் சரி, இன்று ஒரு வருடத்துக்கு மேலாக தொடரும் மொனராகல விவசாயிகள் போராட்டமாக இருந்தாலும் சரி இலங்கை அரசுக்கு எதிராக செயற்படும் எந்தப் போர்முனையையும் வலுப்படுத்துவதன் மூலம் இலங்கையின் பகுபிற்போக்கு அரசை தூக்கியெறியும் மூலோபாயத்தை நாம் இன்று வகுத்துக் கொள்ள வேண்டும்.

www.tamilarangam.net

சில விடுதலை இயக்கங்கள் வாதிக்கக் கூடும் இரண்டாவது போர்முனைக் கருத்தை நாம் ஏற்கனவே முன் வைத்துள்ளோம். சிங்கள மக்களோடு தொடர்புகளை அதிகரித்து வருகிறோம் என. நாம் இங்கு கருதுவது நாம் முற்போக்கு வாதிகள் என காட்டுவதற்காக சிங்கள மக்களுடன் மேற் கொள்ளப்படும் மட்டும் படாததுமான தொடர்புகளை அல்ல.

வெட்டொன்று துண்டு இரண்டாக கூறுவதானால் சிங்கள மக்கள் மத்தியில் உருவாகும் அரசுக்கெதிரான முரண்பாடுகளை ஸ்திரம் வாய்ந்த இரண்டாவது போர்முனையாக கட்டியெழுப்ப ஈழவிடுதலை இயக்கங்கள் ஆத்மீக சடத்துவ ரீதியில் முன்வரவேண்டும். இடதுசாரி முற்போக்கு சக்தி களோடு பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தி இந்த சக்திகளின் தலைமையில் ஒடுக்கப்பட்ட சிங்கள மக்கள் அணிதிரள்வதற்கு தமிழ் மக்களின் மூளைப் பலமும், ஆயுதப் போராட்ட யுக்திகளும் பொருளாதார வளங்களும் பயன் பட வேண்டும்.

சிலர் வினவக் கூடும் இன்று தென்னிலங்கையில் நிலவும் எந்த போராட்டத்தை நாம், வலுப்படுத்துவது என. எனவே ஒரு வருடத்திற்கு மேலாக தொடரும் மொன ராகலை விவசாயிகளின் போராட்டத்தைப் பற்றி இங்கு சற்று ஆராய்ந்து எமது கடமைப்பாடுகள் என்ன என்பதை புரிந்து கொள்ள முயல்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## வரலாற்றுப் பின்னணி.

மொனராகலை விவசாயிகளின் போராட்டமானது இன்று இலங்கை அரசியலில் முக்கிய பங்கை வகிப்பதற்கு காரணம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் தொடர்ச்சியான மந்த போக்கே ஆகும். திட்டமிடப்படாத 1980ம் ஆண்டு பொது வேலை நிறுத்தம் தோல்வியடைந்ததை தொடர்ந்து தொழிற் சங்க நடவடிக்கைகள் பிசுபிசுத்துப் போயின. 1984ம் ஆண்டு அரசுக் எதிரான அதி சக்தி வாய்ந்த போராட்டமாக அமைந்த பல்கலைக் கழக மாணவர்களின் வீரமிக்க போராட்டமும் தொட்டறியக் கூடிய விளைவைக் கொடுக்கவில்லை. 1985, 86 இல் விவசாயிகளின் போராட்டம் உரம் பெற்றுள்ளது.

சர்வதேச முதலாளித்துவக் கம்பனிக்கு 12,000 ஏக்கர் நிலம், விவசாயிகள் வீதியில்.

மொனராகல மாவட்டத்தில் காலாகாலமாக விவசாயம் செய்து வரும் வறிய சிங்கள மக்களை காணிகளை விட்டு வெளியேற்றி விட்டு மெற்று இன்ரநாஷெனல் (META INTERNATIONAL) என்னும் சர்வதேச கம்பனிக்கு 12,000 ஏக்கர் நிலத்தினை வழங்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. ஒரேயடியாக காணிகளை விட்டு விவசாயக் குடும்பங்களை வெளியேற்றுவது கடினம் என அறிந்த அரசாங்கம் பகுதி பகுதியாக வெளியேற்றும் நடவடிக்கையை

www.tamilarangam.net

ஆரம்பித்துள்ளது. இதனை எதிர்த்து மொனராகல விவசாயிகள் போர்க் கொடி தூக்கியுள்ளார்கள்.

400 ஏக்கர் விவசாயக் காணியினை புல்டோசர் கொண்டு மட்டப்படுத்தியது சர்வதேச கம்பனி. இந்தக் காணியினுள் அத்துமீறி பிரவேசித்து வாழைக்கன்றுகளை நாட்டினர் விவசாயிகள். பொலிசாரினதும், குண்டர்களினதும் துணையோடு வாழைகளை பிடுங்கியெறிந்து விட்டு கரும்புக் கன்றுகளை நாட்டியது சர்வதேசக் கம்பனி. இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள் கரும்புக் கன்றுகளைப் பிடுங்கி எறிந்தனர். ஆனால் தற்சமயம் பொலிசாரினதும், குண்டர்களினதும் துணையோடு கரும்புச் செய்கையில் தொடர்ந்து ஈடு பட்டுள்ளது சர்வதேசக் கம்பனி.

மொனராகல விவசாயிகள் போராட்டத்தை ஸ்திரப் படுத்த இடதுசாரிக் கட்சிகளும், அவற்றின் விவசாய அணிகளும் ஒன்றுபட்டுப் போராடுவது ஒரு சிறப்பு அம்சமாகும். சர்வதேச கம்பனிக்கு காணிகள் வழங்குவதை எதிர்க்கும் போராட மொனராகல விவசாயிகள் நலன் புரி கமிட்டி (MONERAGALA PEASANTS' WELFARE COMMITTEE ) என்ற புதிய அமைப்பு ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதே பொழுதில் கிராமங்களில் காணிகளுக்கு நீர் பாய்ச வரி அறவிடுவதற்கு எதிராக அரசியல் மயப்படுத்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்ட போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. தேசிய நீர்வரி எதிர்ப்புக் கமிட்டி (NATIONAL COM-MITTE AGAINST WATER TAX ) என்ற மக்கள் அமைப்பு பல்வேறு கிராமங்களில் நீர் வரி (WATER TAX ) அறவிடுவதற்கு எதிராக நடக்கும் போராட்டங்களை ஒருங்கிணைக்கின்றது.

மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் 24,000 ஏக்கர் காணியை சர்வதேச கம்பனிக்கு வழங்கும் திட்டத்தை எதிர்த்து 1981 இல் மலேசிய தூதராலயத்திற்கு முன்னர் விவசாயிகள் பேரணி ( PEASANTS FRONT ) நடாத்திய போராட்டம் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் அளவு சக்தி வாய்ந்ததாக அமைந்தது. 1985 செப்டம்பர் 11ம் திகதி விவசாயிகள் சம்மேளனத்தின் கூட்டுக் கமிட்டி மொனராகல விவசாயிகள் பிரச்சனையை, "நீர்வரி" க்கு எதிரான நடவடிக்கைகள், தாதிகள் கோரிக்கை, வங்கி ஊழியர் கோரிக்கை அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் கோரிக்கை என்பவற்றுடன் இணைந்து சக்தி வாய்ந்த ஊர்வலமாக நடாத்தி முடித்துள்ளது. விசேட அதிரடிப் பொலிசாரின் முற்றுகைக்கு மத்தியில் கொழும்பில் நடந்த இந்த ஊர்வலத்தில் விவசாயிகள், நகர்புறத் தொழிலாளர், வங்கி ஊழியர், தாதிமார், பௌத்த குருமார், பெண்கள் ஏராளமாக கலந்து கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொனராகல விவசாயிகள் போராட்டம் வலைப் பின்னலாக்கி வளர்ந்து அரசியல் மயப்படுத்தப்பட்டு ஓராண்டு எல்லைக் கோட்டை கடந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஈழவிடுதலை இயக்கங்களின் கடமைப்பாடு.

இவ்வாறாக ஜயவர்த்தனா அரசுக்கெதிராக கூர்மையடைந்து வரும் முரண்பாட்டை வளர்த்தெடுத்து ஜயவர்த்தனா அரசை தோற்கடிக்கும் மூலோபாயத்தை வகுத்துக் கொள்ளவேண்டியது நமது கடமைப்பாடாகும். இந்தக் கடமைப்பாட்டை தொடர்ச்சியாக புறக்கணித்துக் கொண்டு (அல்லது சரியான முக்கியத்துவம் கொடுக்காது.) இந்தியாவின் தலைமையில் ஓர் அரசியல் தீர்வை கொண்டு வந்து விடலாம் என எண்ணுதோ அல்லது இந்திய உதவியுடன் ஈழத்தை அமைத்து விடலாம் எனஎண்ணுவதோ இந்திய தேசிய முதலாளித்துவத்தின் குணாம்சங்களை முழுமையாக புரிந்து கொள்ளத் தவறுவதன் விளைவாகும்.

தென்னிலங்கையில் வளரக்கூடிய மற்றைய போர்முனைகளை ஈழப் போராட்டத்துடன் ஒருங்கிணைக்க வேண்டியது ஈழ விடுதலை இயக்கங்களின் கடமைப்பாடாகும். இந்த இரண்டாவது போர்முனை விவசாய சம்மேளனங்கள் தலைமை கொடுத்து நடாத்தும்வரையில் அது முதலாளித்துவ அரசை தோற்கடித்து ஆட்சியதிகாரத்தை கைப்பற்றாது. இந் இரண்டாவது போர்முனை தொழிற் சங்கங்களினால்

www.tamilarangam.net

ஒரு தொழிலாள வர்க்கக் கட்சியின் தலைமையின் கீழ் ஸ்திரமாக்கப் படுவதன்மூலம் சிறிலங்காவின் முதலாளித்துவ அரசு தோற்கடிக்கப்படும். ஈழப் புரட்சியும், தென்னிலங்கையின் புரட்சியும் சாத்தியமாகும்.

ஈழப் புரட்சி முன்னர் நடக்கும், ஈழத்துக்கு அப்பாற்பட்ட மக்களின் புரட்சி நடக்க நாட்கள் எடுக்கலாம், ஏனெனில் ஈழமக்கள் போராட்டம் ஏற்கனவே வலுப்படுத்தப்பட்டுள்ளது, என சிலர் வாதிடலாம். புரட்சி என்பது இன்று இலங்கை முதலாளித்துவத்திடம் இருக்கும் அரச நிர்வாக இயந்திரங்களை நிர்மூலமாக்கி அதனிடத்தில் தொழிலாள வர்க்கத்தின் அதிகாரத்துடன் கூடிய புதிய நிர்வாக இயந்திரங்களை கொண்டுவருவதேயாகும்.
இன்று இலங்கையின் நிர்வாக இயந்திரங்கள் செறிந்த பகுதி மேற்கு மாவட்டமேயாகும். எனவே இந்த மாவட்டத்திலுள்ள நிர்வாக இயந்திரங்களை அந்த மாவட்டத்து தொழிலாளர்களே தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரமுடியும்.

மேற்கு மாவட்டத்தில் அரசுக்கும் தொழிலாளருக்கும் இடையில் முரண்பாடு உருவாகாதவரை இலங்கையின் முதலாளித்துவ அரசு பெரிய அளவில் ஆட்டம் காணப் போவது கிடையாது. (1972 ஏப்ரல் கிளர்ச்சியில் சிறிமாவோ அரசாங்கம் மேற்கு மாவட்டத்தை பாது காத்ததன் மூலம் முழுக் கிளர்ச்சியையும் முடிவுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டுவந்தது. 1971 ஏப்ரல் படிப்பனை பற்றி பிறிதொரு சமயம் ஆராய்வோம்.) தமிழ் ஈழப் போராளிகள் தமிழ்பகுதிகளில் ஆக்கிரோஷமாக ஆயுதப் படைகளை தாக்கி அவர்களை அழித்தாலும்(ஆயுதப் படைகள் அழியும்போது ஜயவர்த்தன அரசாங்கம் சிங்கள குண்டர்களையும், சமூக விரோதிகளையும், அதீத இன வாதிகளையும், படித்த வேலையற்ற இளைஞர்களையும் ஆயுத பாணியாக்கி தனது குறிக்கோளை தொடர்ந்து நிறைவு செய்கின்றது.) சக்திமிக்க இரண்டாவது போர் முனை தென்னிலங்கையில் கட்டியெழுப்பப்பட்டு சிறிலங்கா அரசு தோற்கடிக்கப்படாதவரை ஈழமக்களுக்கு விமோசனம் ஏற்படப்போவதில்லை. இதுவே விஞ்ஞான பூர்வமாக நாம் எடுக்கக்கூடிய முடிவாகும்.

ஈழவிடுதலை இயக்கப்பத்திரிகைகளில் இரண்டாவது போர் முனைக்கருத்து ஆழமாக்கப்பட்டு ஒவ்வொரு ஈழத் தமிழ னும் தமிழ் சிங்கள இனவாத திரைகளை கிழித்தெறிந்து முற்போக்கான பார்வையைக் கொண்ட முழு மனிதர் களாக உருவாக ஈழவிடுதலை இயக்கங்கள் நடைமுறைச் செயற்பாட்டில் இறங்க வேண்டும்.

இரண்டாவது போர்முனைக் கருத்து முற்போக்கு முத்தி ரையாக மட்டும் அமையாது யதார்த்த பூர்வமான செயற்பாடாக பரிணமிக்க வேண்டும். ஈழ மக்களும் ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களும் விஞ்ஞான பூர்வமான முடிவுகளால் விடிவு பெற வேண்டும். □

www.tamilarangam.net

# வெல்லப்படாத விடுதலை

அது
நம் கைகளில்
இப்போது இல்லை
இப்போது மட்டும் தான் இல்லை.

நேற்று
நீயும் நானும்
எரிக்கப்பட்ட போதும் கூட
நம் நிலமும் வானும்
புகைந்த போதும் கூட
இந்த வெளிகளும்
கிழக்கு வயல்களும்
நம்முடையதாக இருந்தன.

வெல்லப்படாத விடுதலையும்
விடுதலைக்கான கனவுகளும்
நம்முடையதாக இருந்தன.
அன்று
கரமுயர்த்தி
கிளர்ச்சி செய்தபோது,
நம் கனவுகள்
உலகத்தை தொட்டன

இன்று வேறு மண்ணில்
கால் ஊன்றி நின்றபோது,
ஆயுதங்களுக்காக
யாசித்த போது,
அது
நம் கைகளில் இல்லை.

அது
இப்போது பல்வேறு
அரக்கக் கரங்களில்
அகப்பட்டு
கிழந்து நெரிபட்டு
நம் கைக்கு மாற
நாக்கு வறண்டு
வீறிடுகிறது.
வேறொன்றுமல்ல
ஏழைத் தோழனே!
நம் விடுதலை தான்.

நன்றி: புதியபாரிசன்.
(இந்தியா)

www.tamilarangam.net

# தமிழ் மக்களுக்கென பாட்டாளி வர்க்கக் கட்சி

[" எண்ணம் " பத்திரிகையில் 1.12.1983 வெளியாகிய " தமிழ் மக்களுக்கென பாட்டாளி வர்க்கக் கட்சி " என்ற தலைப்பிலான கட்டுரையையொட்டி சிந்தனை ( 2/85 ) முதலாவது கருத்துப் பரிமாறல் கட்டுரை வெளிவந்தது. சென்ற இதழில் தமிழ் மக்கள் மத்தியில் ஓர் பாட்டாளி வர்க்கக் கட்சி ஏன் வளரவில்லை என்பதை ஆராய்ந்தோம். இந்த இதழில் ஓர் பாட்டாளி வர்க்கக் கட்சி ஏன் அவசியம் என்பதை வரலாற்று ரீதியாக ஆராய முன்வருவோம்.
அடுத்த இதழில் ஓர் பாட்டாளி வர்க்கக் கட்சி எவ்வாறு உருவாகலாம் அதன் சாத்தியக் கூறுகள் என்ன என்பதை ஆராய்வோம் :]

தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையானது உச்சக் கட்டத்தை அடைந்துள்ள இவ்வேளையில் தமிழ் மக்களின் தேசிய உணர்வுகளும் மேலோங்கி நிற்கின்றன. இக்கால கட்டத்தில் தமிழ் மக்களுக்கென ஓர் பாட்டாளி வர்க்கக் கட்சியை ஏன் கட்டியெழுப்ப வேண்டும் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கடந்த அரைநூற்றாண்டு காலமாக தமிழ் மக்களின் பேராதரவை பெற்ற தமிழ் காங்கிரஸ் கட்சியும், தமிழ் அரசுக் கட்சியும் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டன. இக்

www.tamilarangam.net

கட்சியின் தலைவர்கள் திறமைசாலிகள், படித்த மேதைகள், மதிநுட்பமுள்ள வழக்கறிஞர்கள், பெருந்தோட்டச் செல்வம் படைத்தவர்கள் ஆக விளங்கினார்கள். இவர்களினால் வழி நடாத்தப்பட்ட தமிழ் மக்களோ இன்று அரசியல் அநாதை களாகவும், சொந்த நாட்டிலேயே அகதிகளாகவும் ஆக்கப் பட்டிருக்கின்றார்கள்.

இன்று கடந்தகால வரலாற்றை எழுதும் ஆசிரியர்களில் பலர் சிங்களக் கட்சிகள் தமிழ் தலைவர்களை ஏமாற்றி யது பற்றியும், தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டதை பற்றியும் கூறுகின்றனர். அரசியல் வரலாற்றை விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் நோக்காது உணர்வு ரீதியாக நோக்கு வதானால் உண்மைகளைக் கண்டுகொள்ள முடியாது. சமுதாய த்திலுள்ள வர்க்கங்களுக்கிடையில் தோன்றும் முரண்பாடு களினால் ஏற்படும் போராட்டங்களின் வரலாறே சரித்தி ரமாகும். இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் கடந்த கால தலைமைகளைப் போல் இந்த வர்க்க முரண்பாடுகளை மூடிமறைத்து தமிழ் மக்கள் என்று பொதுவான பூசி மெழுகி உணர்ச்சி சாயம் பூசி வரலாற்றை திரித்துக் கூறுவதானால் இவர்களும் வருங்கால சந்ததியை ஏமாற்ற முனைகின்றார்கள்.

வர்க்க ரீதியாக பிளவுபட்டிருக்கும் ஓர் சமுதாயத்தில் தோன்றும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஏதாவது ஒரு வர்க்கத்தின் நலனுக்காகவே செயற்படும். எந்த விதமான வார்த்தை ஜாலங்களை பாவித்தாலும் தமது வர்க்க

www.tamilarangam.net

நலன்களைப் பாதுகாப்பதே இக் கட்சிகளின் நோக்கமாக இருக்கும். தமிழர் மத்தியில் தோன்றிய அரசியல் கட்சிகள் இதற்கு விதிவிலக்கல்ல.

ஆங்கிலேய ஆட்சியின் கீழ் புதிய ஆளும் வர்க்கங்களின் தோற்றம்.

இலங்கையில் நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்புமுறை நிலவி வந்த காலத்திலேயே ஆங்கிலேய ஆட்சி ஏற்படுத்தப் பட்டது. ஆங்கிலேய ஆட்சி தனது நிர்வாக தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உயர்சாதி நிலப் பிரபுத்துவ வர்க்கங்களிலிருந்து ஒரு பகுதியினருக்கு ஆங்கில கல்வியையும், பணம், நிலம், விருதுகளையும் அளித்து ஒரு தரகு ஆளும் வர்க்கத்தை உருவாக்கியது.

இந்த ஆளும் வர்க்கம் ஆங்கில ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப்பட்டதினால் ஏகாதிபத்திய விரோத சக்தியாக உருவாகவில்லை. அதே நேரத்தில் நிலப் பிரபுத்துவத்தின் கருவில் இருந்து தோன்றிய படியால் நிலப் பிரபுத்து வத்திற்கு எதிரான சக்தியாகவும் உருவாகவில்லை. (முதலாளித்துவ புரட்சி நடந்த நாடுகளில் முதலாளி த்துவ வர்க்கம் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான சக்தியாகவே உருவாகியது என்பதை ஒப்பிட்டுக் கொள் வோம்.)

ஏகாதிபத்திய தரகர்களாக விளங்கிய தமிழ் சிங்கள

www.tamilarangam.net

தரகு ஆளும் வர்க்கங்கள் ஆங்கில ஏகாதிபத்திய சுரண்டலுக்கு ஆதரவு கொடுத்தனர். இந்த ஆளும் வர்க்கங்கள் தம்மை முதலாளித்துவ வர்க்கமாக வளர்த்துக் கொள்ள தேவையான மூலதனமும், சந்தையும் இல்லாத காரணத்தால் தமது வர்க்க நலன்களைப் பாதுகாக்கக் கூடிய ஏகாதிபத்திய கட்டுப்பாட்டுடன் கூடிய ஒரு அரசியல் சுதந்திரத்தையே வேண்டி நின்றனர்.

இந்தக் காரணத்தினால் இந்தியாவில் போன்று முதலாளி வர்க்கத் தலைமையிலான சுதந்திரப் போராட்டம் ஒன்று இலங்கையில் உருவாகவில்லை. இந்திய அரசியல் சுதந்திரத்தின் பின் ஆங்கிலேயர் தமது பெரும் தோட்ட மூலதனங்களையும், இராணுவத் தளங்களையும் பாதிக்காத முறையில் இலங்கைக்கு ஒரு போலி அரசியல் சுதந்திரத்தை அளித்தனர்.

இந்த அரசியல் சுதந்திரத்திற்கு முன்னர் பெருந் தோட்ட ஏற்றுமதி வர்த்தகம் யாவையும் ஆங்கிலேய கம்பனிகளின் கைகளிலேயே இருந்தன. உணவும் மற்றும் பொருட்களின் வர்த்தகமும் வளர்ந்து வந்த சிங்கள தமிழ் முதலாளிகளுக்கு வங்கிகள் போல் செயற்பட்ட வட்டிக் கடைகளும் இந்திய முதலாளிகளின் கைகளிலேயே இருந்தன.

அரசியல் சுதந்திரம் பெற்ற இலங்கை முதலாளி வர்க்கம் இந்திய முதலாளிகளை வெளியேற்றுவதிலேயே கண்ணாக இருந்தனர். இந்திய முதலாளிகளின் வெளியேற்றத்தால்

www.tamilarangam.net

ஏற்பட்ட இடைவெளிகளை சிங்கள, தமிழ் முதலாளிகள் நிரப்பினர். அரசியல் சுதந்திரத்தின் பின் தரகு முதலாளித்துவத்தின் குணங்களில் இருந்து மாறுபட்ட தேசிய முதலாளித்துவம் வளர்ச்சிபெறத் தொடங்கியது.

பெருந் தோட்ட பொருளாதாரத்துடன் கூடிய வெளிநாட்டு வர்த்தகம், ஆங்கில மொழி, மேல் நாட்டுக் கலாச்சாரம் ஆகிய குணும்சங்களை கொண்ட தரகு முதலாளித்துவத்திற்கு எதிரிடையாக உள்நாட்டு இறக்குமதி வர்த்தகம், சிறுகைத்தொழில்கள், சுதேசிய மொழிகள், சுதேசிய கலாச்சாரத்துடன் கூடிய தேசிய முதலாளித்துவம் வளர ஆரம்பித்தது. இத் தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு தரகு முதலாளித்துவம் இடைஞ்சலாக அமைந்தது.

அரசியல் சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து நாட்டை ஆண்டு வந்த சிங்கள தமிழ் தரகு முதலாளித்துவத்தின் அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியானது நாட்டு மக்களின் பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்க்காத படியினால் 1953, ஆகஸ்ட் 12இல் மாபெரும் பொது வேலைநிறுத்தமும், கர்த்தாலும் வெடித்தெழுந்து அரசாங்கத்தையே உலுக்கியபின் இந்த மக்கள் எழுச்சியை சிங்கள தேசிய முதலாளித்துவ சக்திகள் தமக்கு சாதகமாக பயன்படுத்தியதுடன் சிங்கள மக்கள் மத்தியில் தேசிய இன உணர்வுகளை ஊட்டி சிங்கள இனவாத கோஷங்களுடன்

www.tamilarangam.net

தரகு முதலாளித்துவ ஆட்சியை 1956இல் தோற்கடித்தது. இத் தேசிய முதலாளித்துவ சக்திகளுக்கு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க ஒரு தலைவராக அமைந்து கொண்டார்.

சிங்கள தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சியானது சிங்கள இனவாதத்தையும் வளர்த்தது. சிங்கள தரகு முதலாளித்துவத்துடன் கூட்டுச் சேர்ந்திருந்த தமிழ் தரகு முதலாளித்துவம் தமிழ் நடுத்தர வர்க்கத்தினருக்கு ஏற்ற படி தமது அரசியல் சுலோகங்களை மாற்றிக் கொண்டு சிங்கள தேசிய முதலாளித்துவத்துடன் மோத தயாராகியது.

தென்னிலங்கையிலிருந்த முதலீடுகளிலும், சந்தையிலும் சிறிலங்கா அரசினை உறுதிப்படுத்தப் பட்டிருந்த வர்க்க இலாபத்திலும் தங்கியிருந்தது தமிழ் முதலாளித்துவம். இதனால் இந்த தமிழ் முதலாளிகளின் நலன்களை பிரதிநிதித்துவப் படுத்திய தமிழ் தலைமை தீர்க்கமான தொடர்ச்சியான அரச எதிர்ப்பு போராட்டத்தை நடாத்த முடியவில்லை.

சிங்கள தரகு முதலாளித்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிங்கள தேசிய முதலாளித்துவ கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் பாராளுமன்றத்தில் ஏற்படும் முரண்பாட்டை தமக்கு சாதகமாக பயன்படுத்தி தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுவிடுவோம் என தமிழ் தலைமைகள் கூறின. இப் பாராளுமன்ற அரசியல் மூலம் தமது வர்க்க நலன்களை

www.tamilarangam.net

பாதுகாத்துக் கொள்ள தமிழ் தலைமைகள் தவறவில்லை. இதன் ஒரு அம்சமாகவே திரு. சா. ஜே. வி. செல்வநாயகம் தலைமை வகித்த தமிழரசுக் கட்சி 1965இல் ஐக்கிய தேசியக் கட்சியின் ஏழு கட்சிகளின் கூட்டணியில் அங்கம் வகித்து ஆட்சிக் கட்டில் ஏறியது. இந்தக் கூட்டு அரசாங்கம் தமிழ் முதலாளிகளுக்கு லாபங்களை ஏற்படுத்தி கொடுத்ததே தவிர தமிழ் மக்களுக்கு எந்த விமோசனத்தையும் கொண்டு வரவில்லை.

பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளை தமக்கு சாதமாக பாவித்துக் கொண்டு 1970ல் தேசிய முதலாளித்துவக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி பீடம் ஏறியது. சிங்கள தேசிய முதலாளித்துவம் துரித வளர்ச்சி அடைவதற்கு தேவையான பாரிய மூலதனமோ, அன்றி சந்தையோ இலங்கையில் இருக்கவில்லை. இந்தியாவில் இருந்தது போல ஒரு உருக்கு தொழிற்சாலையையோ ஒரு டயர் தொழிற்சாலையோ உருவாக்கக் கூடிய ஒரு டாட்டாவோ, ஒரு பிர்லாவோ இலங்கையில் இருக்கவில்லை. ஆகையினால் அரசாங்கமே அவ்வாறான தொழிற்சாலைகளை அரச மூலதனத்துடன் நிறுவியது. அவற்றுக்குத் துணையான தொழில்களையும், கொந்தராத்துக்களையும் தேசிய முதலாளிகள் ஒத்துக் கொண்டு தமது இலாபங்களைப் பெருக்கலாயினர்.

இறக்குமதிக் கட்டுப்பாடு, ஏற்றுமதிச் சலுகைகள், வரி

www.tamilarangam.net

விலக்கு, அரச வங்கிக் கடன்கள் ஆகிய சலுகைகள் மூலமாக சிங்கள தேசிய முதலாளி வர்க்கம் வளர்ந்தது. அரசு கடைப்பிடித்த இனவாதக் கொள்கைகளினால் தமிழ் தேசிய முதலாளிகளுக்கு இந்த சலுகைகள் கிட்டவில்லை. தரப்படுத்தாலும், வேலைவாய்ப்பு மற்றும் அரசின் இன ஒடுக்கல் நடவடிக்கையாலும் அதிருப்தி கொண்ட தமிழ் இளைஞர்களின் அரசுக்கெதிரான எதிர்ப்பை தமிழ் முதலாளித்துவ தலைமைகள் தமது வர்க்க நலன்களைப் பாதுகாக்க ஊக்குவித்துவிட்டனர். தமிழ் மக்கள் முழுமையையும் தமக்கு பின்னால் அணிவகுக்க வேண்டி இளைஞர்கள் முன்வைத்த தனிநாட்டுக் கோரிக்கையை தமிழர் விடுதலை கூட்டணி தமது கோரிக்கையாக முன்வைத்தது.

வளர்ந்து வந்த சிங்கள தேசிய முதலாளித்துவத்திற்கு மேலதிகமான மூலதனமும், கட்டுப்பாடற்ற சந்தையும் தேவைப்பட்டபோது தேசிய முதலாளித்துவத்தின் நோக்கங்களும் தரகு முதலாளித்துவத்தின் நோக்கங்களும் ஒருமைப்பாடு அடைந்தன. இம்முதலாளித்துவ வர்க்கங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் வெளிநாட்டு மூலதனத்தை கட்டுப்பாடின்றி கொண்டு வரவும் சுதந்திர வர்த்தக வலையம் போன்ற திட்டங்களை அமுல் செய்ய வேண்டிய தேவை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்டது. இத்திட்டங்களுக்கு எதிரான இடதுசாரிக்

www.tamilarangam.net

கட்சிகள் ஐக்கிய முன்னணிக் கூட்டிலிருந்து வெளியேற்றப் பட்டன.

இந்தச் சூழ்நிலைகள் தரகு முதலாளித்துவத்தை பிரதிநிதிப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியை 1977இல் ஆட்சிப்பீடம் ஏற்றியது. ஐக்கிய தேசியக் கட்சியால் முன்வைக்கப்பட்ட திறந்த பொருளாதாரத் திட்டத்தின் கீழ் சகல முதலாளிகளும் எந்தவிதக் கட்டுப் பாடின்றி தொழிற்பட அனுமதிக்கப்பட்டனர். அரச கூட்டுத்தாபனத்தின் கைகளில் இருந்த வர்த்தகம் தனியார் துறைக்கு மாற்றப்பட்டது. அரச வங்கிகளுடன் போட்டியிட்டு தனியார் வங்கிகளும் சகல முதலாளிகளுக்கும் கடன் வசதி அளிக்க அனுமதிக்கப்பட்டனர். இவ்விதமான திறந்த பொருளாதாரக் கொள்கையினால் சிறிமாவோ ஆட்சிக் காலத்தில் மூச்சு விட முடியாதிருந்த தமிழ் முதலாளிகள் துரித வளர்ச்சியடைய ஆரம்பித்தனர். ஐ. தே. க. அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்கள் சாதாரண தமிழ் விவசாயிகளுக்கும் குடிமக்களுக்கும் எந்தவித நன்மையையும் அளிக்காத போதும் தமிழ் முதலாளிகள் பெற்ற சலுகைகளுக்காக ஐ. தே. கட்சியுடன் சமரசவாதப் போக்கை தமிழர் விடுதலை கூட்டணி மேற்க் கொண்டது.

இச் சமரச வாதப் போக்கின் பலனாகவே ஜே. ஆர். ஜயவர்த்தன அரசியலமைப்பெச் சட்டத்திருத்தத்தின்

www.tamilarangam.net

மூலம் தன்னை அனைத்து அதிகாரங்களும் பொருந்திய ஜனாதிபதியாக நியமித்த போது எதிர்ப்புக் காட்டாது மௌனம் சாதித்து சம்மதம் வழங்கினர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக் காலத்தில் உண்ணாவிரதமும், சத்தியாக்கிரகமும், கர்த்தால் போன்ற போராட்டங்களை நடாத்தியவர்கள் புலி தடைச்சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் போன்றவை அமுலுக்கு வந்த போது வாய்மூடி மௌனியாயினர். தமிழ் மக்களுக்கு எந்தவித உரிமைகளையும் வழங்காத மாவட்ட சபைகளை தமிழர் பிரச்சனைக்கு தீர்வளிக்கும் வரப்பிரசாதமாக ஏற்றுக் கொண்டனர். இது மட்டுமல்லாது ஜே. ஆர். ஜயவர்த்தனா மீண்டும் ஜனாதிபதியாவதற்காக தமிழ் மக்களை அவருக்கு எதிராக வாக்களிக்கத் தூண்டாது, பகிஷ்கரிக்கும்படி சதி நாடகம் ஆடினர்.

1977வரை அரச புறக்கணிப்பில் ஒடுக்கப்பட்டு வந்த தமிழ் முதலாளிகள் திறந்த பொருளாதாரத் திட்டத்தின் கீழ் சிங்கள முதலாளிகளுடன் போட்டியிட ஆரம்பித்தனர். தமது இலாபத்தில் தமிழ் முதலாளிகள் பங்கு கொள்வதை சகித்துக் கொள்ளமுடியாத சிங்கள முதலாளித்துவம் தமிழ் முதலாளிகளின் முதலீடுகளை மேற்கு மாகாணத்திலிருந்து ஒழித்துக் கட்ட திட்டங்கள் தீட்டியது. இதன் விளைவே 1983 இரத்த ஆடியாகும். அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ் முதலாளிகளுக்கு சொந்தமான தொழி

www.tamilarangam.net

ஸ்தாபனங்கள் சேர்ந்தெடுக்கப்பட்டு தாக்கப் பட்டன. சிங்கள முதலாளித்துவத்தின் தேவைகளை சிறிலங்கா அரசு இனக்கலவரத்தின் மூலம் நிறைவேற்றியது."

அழிவையும் எதிர்ப்பையும் எதிர்நோக்கும் எந்த ஒரு முதலாளியும் செய்யக் கூடியவற்றையே தமிழ் முதலாளிகளும் செய்தனர். தமது முதலீடுகளையும், இருப்பிடங்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றினர். பெரும் அளவிலான முதலீடுகள் இந்தியாவிற்கு நகர்த்தப்பட்டன. தமிழ் முதலாளித்துவ தலைமைகள் இந்திய முதலாளித்துவத்திடம் சரணடைந்தன. இதுவே தமிழ் முதலாளித்துவத்தின் சரித்திரமாகும்.

இன்றைய சிறிலங்கா அரசானது மலையகத் தமிழ் தொழிலாளர்களின் உற்பத்தியில் சுரண்டப்படும் இலாபத்தினை (உபரி உற்பத்தியினை) சிங்கள முதலாளித்துவத்தை வளர்ப்பதையே அடிப்படை நோக்கமாக கொண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக அரசு கீழ் காணும் நடவடிக்கைகளை தொடருகின்றது.

1. நாட்டின் முக்கியமான உபரியை உற்பத்தி செய்யும் மலையக தமிழர்களை தனது பூரண கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. உபரியை உற்பத்தி செய்யும் கட்டாயத்தை தவிர வேறு எந்த உரிமையையும் அற்ற மக்களாகவே மலையகத் தமிழர்கள் வாழ்கின்றார்கள்.

www.tamilarangam.net

2. இந்த உபரி இலாபத்தை தமிழ் மக்கள் பகிர்ந்து கொள்வதை தடுக்க அவர்கள் மீது இன ஒடுக்கல் நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது.

3 உபரி உற்பத்தியானது சிங்கள முதலாளித்துவத்திற்கு மட்டுமே பயன்பட வேண்டும் என்பதற்காக சாதாரண சிங்கள தொழிலாள விவசாய மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்யாது அடக்குமுறை ஆட்சி செலுத்துகின்றது.

இக் காரணங்களினாலேயே சிறிலங்கா அரசை முதலாளித்துவ பேரினவாத அரசு என நாம் அழைக்கின்றோம். எமது போராட்டம் இப் பேரினவாத அரசுக்கெதிரானதே. சிறிலங்கா அரசை தோற்கடிப்பதன் மூலமே ஈழ விடுதலையை நிதர்சனமாக அமைய முடியும்.

நாம் முன்னெடுக்கும் விடுதலைப் போராட்டமானது சிறிலங்கா அரசின் உபரியின் பெரும்பகுதியை உற்பத்தி செய்யும் மலையக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துடனும் அடக்குமுறைக்கு எதிராக இன்று அணிதிரண்டு கொண்டிருக்கும் சிங்கள தொழிலாள விவசாயிகளின் போராட்டத்துடனும் ஒருங்கிணைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.
இவ்வாறன ஒருங்கிணைந்த போராட்ட மூலோபாயத்தை தமது வர்க்க நலன்களில் கண்ணாயிருக்கும் தமிழ் முதலாளித்துவத் தலைமைகள் நடைமுறைப்படுத்தப் போவதில்லை.

www.tamilarangam.net

காலாகாலமாக நிலப்பிரபுக்களினாலும், முதலாளிகளினாலும் சுரண்டப்பட்டுவரும் கூலி விவசாயிகளும், தொழிலாளர்களும் நடுத்தர வர்க்கத்தினருமே இன்று சிறிலங்கா அரசின் இனவாத ஒழிப்பு நடவடிக்கைக்கு நேரடியாக முகம் கொடுப்பவர் ஆவர். இந்த மக்களின் விடுதலைக்காக சிறிலங்க அரசுக்கெதிராக தொடுக்கும் போராட்டமானது இம்மக்களின் வர்க்க நலன்களை பாதுகாக்கும் போராட்டமாக தொடரப்பட வேண்டும்.

இவ்வாறு அமையும் போராட்டமானது சிறிலங்கா அரசுக்கு எதிரான மலையக மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும் சிங்கள தொழிலாள விவசாயிகளின் புரட்சிப் போராட்டங்களிற்கும் முரணற்றதாகவே அமையும். ஆகவே தமிழ் தொழிலாள, விவசாய மக்களின் நலன்களை பிரதிபலிக்கும் செயற் திட்டத்தைக் கொண்ட தலைமையினாலேயே நாம் முன்கூறிய ஒருங்கிணைந்த போராட்ட மூலோபாயத்தை செயல்படுத்த முடியும். ஆகவே இவ்வாறான புரட்சிகர வேலைத்திட்டத்தைக் கொண்ட பாட்டாளி வர்க்கக்கட்சி இன்றைய தமிழ் மக்களின் வரலாற்றுத் தேவையாக அமைந்துள்ளது. □



www.tamilarangam.net

# எந்தக் கைகளில் விடுதலை

ஆதிக்கச் சாட்டைகள்
அடித்த காயங்கள்
ஈரம் உலராமல்
இப்போதும் எங்கள் உடலில்!
இரவு பெய்த மழைக்கும்
எம் வீட்டு முற்றத்தில்
அழிபடவேயில்லை
இரத்தக் கறைகள்!
காட்டு வெளிகள் எல்லாம்
தோழரின் கதறல்கள்!
எங்கள் புல்வெளிக்கு
பனித்துளி மகுடமில்லை
ரத்தத்துளி மகுடங்கள்.

நம்புங்கள்,
விடுதலையாளர்களே
கொலைசெய்யும் கைகள்
விடுதலைக்கு
விதை விதைக்காது.

சாட்டைகளோடு,
கறுப்புச் சட்ட சவுக்களோடு
சொந்த நாட்டு மக்களின்
தொண்டைக் குழியைக் கிழிப்பவன்
இன்னொரு நாட்டுக்கு
இன்பவிடுதலை தரமாட்டான்.

இங்குள்ள பிணங்கள் தானா?
இலங்கைத் தமிழரின் பிணத்திலும்
ஆட்சிக் கட்டில் அமர
இன்னொரு 'தமிழன்' துடிப்பான்.

எந்தக் கனவுகளில்
நீங்கள் விழித்தீர்?
யாருடைய கரங்களில்
அடைக்கலம் புகுந்தீர்?

www.tamilarangam.net

"கழுகின் சிறகுகளும்"
"காக்கையின் மோப்பமும்"
இலங்கையின் மேலே
கொத்திக் குதறிட
இந்தியக் காக்கைகள்
காத்திருக்கும் அருகே.

எந்தக் கனவுகளில்
நீங்கள் விழித்தீர்?
யாருடைய கைகளில்
அடைக்கலம் புகுந்தீர்?

உங்களின் சூரியனை
இனம், மதம், தேசம் கடந்து
உழைக்கும் கரங்களின்
உயர்ந்த பிணைப்பில்
பதித்தெழுப்பீர்.

நன்றி:- மனஓசை
(இந்தியா).

(4-ம் பக்க தொடர்ச்சி)

தமிழீழத்தின் இறைமையானது யாருக்கும் தாரை வார்த்துக் கொடுக்கப்படவில்லை. — ஆம், எந்த ஒரு இயக்கத்திற்கோ அன்றி தலைவருக்கோ அவ்விறைமை தாரை வார்த்துக்கொடுக்கப் படவில்லை. மக்களுக்காக இயக்கங்களேயன்றி இயக்கங்களுக்காக மக்களில்லை.

தமிழ் மக்கள் சீராக சிந்தித்து வருங்கால வரலாற்றை உருவாக்குவதில் பங்கு கொள்ள வேண்டும். வரலாற்றில் ஒரு "அடோல்ப் ஹிட்லரும்" "பொல் போட்டும்" தோன்றுவதற்கு காரணம் மக்கள் அரசியல் விழிப்புடன் செயல்படத் தவறியதேயாகும். அந்த நிலை ஈழத்தமிழருக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது. □

www.tamilarangam.net



# சர்வதேசப் பயங்கரவாதி ரேகன்

ஏகாதிபத்தியத்தின் ஏகதலைவனான அமெரிக்கா தனது சுரண்டல்களை வலுப்படுத்துமுகமாகவும், மூலவளங்கள் கொண்ட வளர்ந்து வரும் நாடுகளை சுரண்டுமுகமாகவும் அந்நாடுகளுக்கு எதிராக அடாவடித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவது தெரிந்ததே. லிபியாவின் மீது சுமத்தப்பட்ட விமானக் கடத்தலும் அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளை லிபியாவின்மீது பொருளாதார தடை மேற்கொள்ள வேண்டுமென அமெரிக்கா கேட்டுக் கொண்டதும் ஏகாதிபத்திய கபட நாடகத்தின் ஓர் அங்கமே.

கடந்த காலத்தில் ரோம் நகரிலும், வியன்னாவிலும நடத்தப்பட்ட விமான நிலையத்தில் பயங்கரவாதச செயல்களுக்கு பின்னணியாக லிபியா இயங்குகின்றது என்ற குற்றச் சாட்டினை அமெரிக்க, இஸ்ரேல் நிர்வாகங்கள் சுமத்தியுள்ளதோடு இது தொடர்பாக

www.tamilarangam.net

நேரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்
எனவும் இந்நிர்வாகங்கள் தீர்மானித்தன. இதனை
உறுதி செய்யும் வகையில்;

மற்றைய நாட்டுமக்களின் இரத்த வெள்ளத்தில் நீந்து
வதையே தமது தொழிலாக கொண்ட இஸ்ரேலிய நிர்
வாகம் மேற்ச சொன்ன விமான நிலையத்தில் தாக்கப்
பட்ட சம்பவத்தையிட்டு பாராளுமன்றத்தில் விவாதித்த
போது பின்வருமாறு கருத்துக்கள் வெளியிடப்பட்டது.

பிரதமர்; இந்நாட்டு பிரஜைகளுக்கு வீட்டிலோ
அன்றேல் வேறிடத்திலோ பயங்கரவாதி
களிடமிருந்து பாதுகாப்பளிக்க வேண்டும்.

பிரதி பிரதமமந்திரி; நாம் எமது கடமையை பாலை
வனத்து மிருகங்களுக்கு எதிராக செய்ய
வேண்டும்.

பாதுகாப்பமைச்சர்; அப்பாவி மக்கள் மீண்டும் இரத்தம்
இரத்தம் சிந்துகின்றார்கள்.

வெளிநாட்டமைச்சர்; நாம் பயங்கர வாதத்திற்கு எதி
ராக இரக்கமற்ற முறையில் நடவடிக்கை
எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

மேற்கண்ட முறையில் தமது வினைத்தை கக்கி பெரிய
ஒரு தாக்குதலுக்கு தயாராகிக் கொண்டு இருக்கிறார்கள்.
அதே நேரத்தில் அமெரிக்க நிர்வாகம் இருபெரும்
கொள்கைகளை லிபியா மீது திணிப்பதற்காக முதலாளித்துவ

www.tamilarangam.net

ஊதுகுழல்களையும், அடிவருடிகளையும் கை கோர்க்கும் வண்ணம் கேட்டிருந்தது.

1. லிபியாவின் மீதான நேரடி இராணுவ நடவடிக்கை.
2. ஐரோப்பிய நாடுகளின்மூலம் லிபியாவின் மீதான பொருளாதார தடை.

ஆனால் மேற்சொன்ன கொள்கைகள் இரண்டும் கீழ்வரும் காரணங்களால் செயற்படுத்தமுடியாமல் போய்விட்டன.

லிபியாவில் அமெரிக்கர் 1,500பேரும், இத்தாலியர் 30,000 பேரும், பிரித்தானியர் 8,000 பேரும் வாழ்கின்றார்கள். இதனால் இவர்களுக்கு எதிராக லிபியா தடைவிதிக்கலாம் என்ற அச்சத்தினாலும் ஐரோப்பிய நாடுகள் லிபியாவுடனான இருவழி வியாபாரம் பொது சந்தையில் 10.2 பில்லியன் தொகையை கொண்டதாக அமைவதாலும் பொருளாதார, இராணுவ தடைகள் சாத்தியமற்றதாகும். லிபியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மூலதனம் 230 மில்லியன் மட்டுமே. பொருளாதார தடையை ஐரோப்பியநாடுகள் மேற்கொண்டால் இந்நாடுகளுக்கு பெற்றோலியம் இல்லாமல் போவதாலும் லிபியாவில் இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகள் கூடுதலான மூலதனத்தை வைத்துக் கொண்டிருப்பதால் இம்மூலதனம் லிபியாவினால் தேசியமயமாக்கப்படலாம் என்ற பீதியினாலும் ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதார தடையை ஏற்கமறுத்துள்ளன.

மேற்ச சொன்ன காரணங்களினால் அமெரிக்க நிர்வாகத்தின் கொள்கைகளை ஊதுகுழல் நாடுகள் ஏற்கமறுத்ததினால் அமெரிக்க நிர்வாகம் சேறுபூசிக்கொண்டது. இதனோடு கேணல் கடாபியின் உறுதியான கொள்கையின் அடிப்படையில் கடந்த சிலதினங்களுக்குமுன் கொடுக்கப் பட்ட தொலைக்காட்சிப் பேட்டியில் (ஜேர்மன்) றேகனின் கொள்கைகள் ஹிட்லர் கொள்கைகள் எனச் சுட்டிக்காட்டி அக்கொள்கைகளுக்கு தாம் பயப்படப் போவதில்லை எனவும் கூறினர்.

கோழிக்குஞ்சு நடான கிறனடாமீது ஆக்கிரமிப்பு மேற்கொண்ட அமெரிக்கா, வறிய நிக்கராகுவா நாட்டை பலாத்காரம் மூலம் கவிழ்க்க கங்கணம் கட்டியுள்ள அமெரிக்கா, சர்வதேச பயங்கரவாதத்தை மொத்த குத்தகைக்கு எடுத்துள்ள அமெரிக்கா, லிபியத் தலைவரைப் பார்த்து பயங்கரவாதி என்று கூறுவதை விட வேடிக்கை என்ன இருக்கமுடியும். □



www.tamilarangam.net

# கற்பனைத்தமிழன்

கற்பனைத் தமிழன் கதைகள் சொல்வேன்
உண்மைகள் கேட்டால் பொறுத்தருள் வீரே!
இத்தனை அழிவுகள் தொடர்கின்ற போதில்
உண்மையை மறைத்தல் நீதிக்கு தகுமோ!
முன்னர்;
வன்னியசிங்கமும் பொன்னரும் வந்தார்
வனப்பில் பல பல தமிழ்க் கதை சொன்னார்
வீரபாண்டிய கதைகளைக் கேட்டான் - இவன்
வீட்டில் சோறில்லா நிலையிலும் கூட

நாட்டான் அரசியல் தலைவர்கள் சொன்ன
தமிழொடு சிங்களம் இனித்திடக் கேட்டான்
தாய் நாடு மீட்கும் கதைகளைக் கேட்டான்
தான் மட்டும் அரசியல் பூச்சியமானான்.
பின்னர்;
அஹிம்சை என்பது விடுதலைக் கிம்சை
ஆயுதப்புரட்சியே எம் போராட்டம்
ஆட்சிக்கு வந்ததும் சோஷலிசம் சமைப்போம்
ஆகவே தத்துவம் இப்போ எதற்கு

கம்யூனிசம் வந்தால் நாடது கெட்டிடும்
கடவுள் இல்லாக் கம்யூனிசம் வேண்டாம்
சோஷலிசத் தமிழீழம் சொந்தத்தில் வேண்டும்
சொன்னதைச் சொன்னான் பைங்கிளி தோற்க.

நேற்றைய வரையில் கம்யூனிசம் பூதம்
இன்றைய போதும் மாக்சிய லெனினிசம்
மாக்சியம் வேறு கொமினிசம் வேறு
சோஷலிசம் என்பது ததிங்கிணதோம் திமிதோம்

www.tamilarangam.net

இப்படிப்பட்ட முற்போக்குத் தமிழன்
இதுவும் சொல்வான் இன்னமும் சொல்வான்
இரண்டு வருடம் பொறுத்திரு இந்தா
"ஓட்டமற்றிக்" சோஷலிசம் நடக்கப்படு தென்பான்

கடலின் ஆழம் முழங்கால் என்றான்
காற்றினைத் திரிப்பேன் கயிறாய் என்றான்
மயிரைக்கட்டி மலையை இழுத்தான் - அந்த
மலையைக்கூட மணற் தம்பிலெடுத்தான்

பொருள் முதல் வாதம் புரியவும் வேண்டாம்
பொருளியல் பற்றிய அறிவும் வேண்டாம்
SMG யும் AK 7 உம்
எம் தமிழ் மறவன் தாரக மந்திரம்

கற்பனைத் தமிழன் மீண்டும் பிறப்பான்
பிற்போக்குச் சேற்றில் மூழ்கி எழுந்து
தனிநபர் பயங்கர வாராரோ பாடி
தனக்கு நிகரவனியில் "ஆரென்று கேட்பான்

கருத்து முதல்வாதம் புரிகின்ற தமிழா!
கான்சரில் கொடியது கற்பனை வியாதி
கற்பனை செய்தே நீ இருப்பது நியதி
பொருளியல், தத்துவம் அனைத்தையும் மறந்தால்

பிற்போக்குத் தமிழன் கற்பனைத் தமிழன்
தலைவர் சொன்னால் தட்டாது கேட்பான்
உடற்பொருள் உண்மை உணர்ந்து தெளியான்
எப்படி யுரைப்போம் எம்மவர் நிலையை.

நன்றி :- அண்ணாமி.

www.tamilarangam.net

# தோழர் சந்ததியார்



**'It is true, indeed, that they can execute the body, but they cannot execute the idea which is bound to live'**

